1969 செப்டம்பர் 11]

இச்சோதனைச் சாவடிகளிலும் உணவு அமைச்சர் சோதனையிட்ட மற்ற சாவடிகளிலும் சரிவர கடமையாற்றாதவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: செக் போஸ்ட்களிலே அதிகார பூர்வமற்ற கடத்தலைக் கண்டுபிடித்து அதைத் தண்டிக்க இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திடீரென்று சோதனை போட்டோம். அங்கு சரிவர நடவடிக்கைப் பணியில் ஈடுபடாதவர்களைக் கண்டுபிடித்து, அவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்காக, அந்தந்த மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: இந்த உணவு அமைச்சரவர்கள் மாறுவேடம் போட்டு சோதனை போட்டார்களா? அப்படியென்றால் மாறுவேடம் போட்டுவிட்டது எந்த ஆர்ட்டிஸ்ட் என்று தெரிந்து கொள்ளலாமா? வருகிற வருஷம் நாம் மாறுவேடப் போட்டிகள் நடத்த வேண்டியிருப்பதற்காக, அந்தத் தகவலைத் தந்தால் பிரயோஜனமாக இருக்கும். எனவே, அந்த ஆர்ட்டிஸ்டின் பெயரைத் தயவுசெய்து வெளியிடுவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, நான் எந்த மாறுவேடமும் அணிந்து கொண்டு போகவில்லை. எப்பொழுதும் இருக்கும் ஒரே வேடத்தோடுதான் போனேன். பத்திரிகையிலே அப்படிச் செய்தி திரித்துப் போட்டது என்னுடைய தவறு அல்ல.

THIRU B. VENKATASWAMY: Sir, there is a wide rumour among the people that the check-posts are not functioning properly even though surprise checks have been made by the Hon. Minister for Food. By that we are losing so much of revenue to our State. Will the Goverenment come forward to tap all such resources by reorganising the present system of check-posts?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்பொழுதிருக்கும் அந்தச் சோதனைச் சாவடிகளைத் திருத்தி அமைப்பதற்காகத்தான் ஆயுதம் தாங்கிய படையினரை ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் நிறுத்தி வைத்திருக்கிறோம். மேலும் பலப்படுத்த அரசாங்கம் தீவிர யோசனை செய்து கொண்டிருக்கிறது.

Dealers in rationed articles

*207 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

whether the High Court has set aside the order of the Civil Supplies authorities, cancelling in some cases or suspending in others the authorisation granted to dealers to supply rationed articles against ration cards alloted to them in Madras City during the month of June, 1969?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: ஆம்.

THIRU K. VINAYAKAM : May I know on what charges of irregularity the authorisations were cancelled, what the explanation given by them was to the department concerned, why they rushed to the High Court in writ petitions and what the judgment was like? Were these authorisations restored to the persons concerned?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, வழக்கம் போல எல்லாவற்றையும் மொத்தமாகக் கேட்டிருக்கிறார்கள். சென்னையைப் பொறுத்தவரையில் பல தவறுகள், ஊழல்கள் நடந்தன என்று கண்டுபிடிக்கப்பட்டு, அவற்றின்மீது அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, ரத்து செய்து, அதன் மேல் அவர்கள் உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, உயர்நீதி மன்றம் அவர்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்திருக்கிறது. இருந்தாலும் அதன்மேல் அமைப்புக்கு, உயர் அமைப்புக்கு அரசாங்கம், மேற்கொண்டு அந்த உத்தரவை மாற்றி அமைக்க வேண்டுமென்று மனுச் செய்ய யோசித்துக்கொண்டிருக்கிறது.

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether those alleged irregularities, seemed to have been committed by them are all false and were not the concerned persons completely acquitted by the High Court?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குற்றம் சாட்டுகிறீர்களே.

THE HON. THIRU P. U. SHANMUGAM : We do not deny that they have been acquitted by the High Court. But I would like to inform the hon. Member that we are going to prefer an appeal.

திரு. என். துரைபாண்டியன் : தலைவர் அவர்களே, புரக்யூர்மெண்ட் செய்கிற நேரத்தில் வெளிச் சந்தையில் என்ன விலை இருக்கிறதோ அந்த விலைதான் கொடுக்கவேண்டுமென்ற வதந்திகள் நடைமுறையில் இருக்கின்றன, அவை உண்மைதானா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு, இது வேறு.

நெல் கொள்முதல்

* 208 வினா.—திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு உணவு, வணிக வரித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல் கொள்முதல், விவசாய விளைபொருள் விற்பனை கழகத்தின் மூலம் நடத்த வேண்டும் என்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இருக்கிறதா?

(இ) ஆம் எனில் அது எப்பொழுது அமுல் நடத்தப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.